LIBRARY
6 - JUL 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 11th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

ராமகிருஷ்ண குடில் (திருப்பராய்த் துறை)

*178 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருப்பராய்த்துறையிலிருக்கும் ராமகிருஷ்ண குடில், ராமகிருஷ்ண தபோவனம் இவைகள் இரண்டிற்கும் எவ்வளவு புறம்போக்கு நிலங்கள் அடமானம் செய்யப்பட்டுள்ளன ?

கனம் திரு. வெ. ராமையா : திருப்பராய்த்துறை கிராமத்தில் எஸ்.எப். 237–5-ல் 9 ஏக்கர் 5 செண்ட் நிலமும் பெருகமணி கிராமத்தில் எஸ்.எப். 8–5-ல் 16 செண்ட் நிலமும் ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. அந்த நல்லூர் கிராமத்தில் எஸ்.எப். 186–2-பி-ல் 30 ஏக்கர் நிலமும் எஸ்.எப். 186–2-ஏ-ல் 12 ஏக்கர் 50 செண்ட் நிலமும் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்துக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. கோயம் புத்தூர் ஜில்லா, கோயம்புத்தூர் தாலூகா, புலுவப்பட்டி கிராமத்தில் சர்வே ந. 424–2-ல் 2 ஏக்கர் 15 செண்ட் நிலமும், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் நிர்வகித்து வருகிற ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த ஆசிர மத்துக்கு வழங்கப்பட்டது.

திரு. து. ப. அழகமுத்து : திருப்பராய்த்துறை பகுதியில் உள்ள எல்லாப் புறம்போக்கு நிலங்களையும் இந்த இரண்டு ஸ்தாபனத்திற்கும் அடமானம் செய்து கொடுப்பதன் மூலம் மேய்ச்சல் காட்டிற்கு இடமில்லை என்று விவசாயிகள் புகார் செய்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபோல் புகார்கள் என் கவனத்திற்கு வரவில்லை.

நெல் விலை நிர்ணயம்

*179 கேள்வி.—**திரு. கரு. சிமைச்சாமி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல் விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிறதா ?

(இ) விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இல்லை.

(*a*) & (*b*) No Sir.

திரு. கரு. சிமைச்சாமி : மில்களில் அரிசி மூட்டைக்கு இவ்வளவு என்று அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அது எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : மில் ஓனர்களிடமிருந்து அரிசி வாங்க மாண்டு ஒன்றுக்கு இவ்வளவு என்று விலை முடிவு செய்திருக்கிறோம். விவசாயிகள் இவ்வளவுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யவில்லை.